# WASHINGTON Exposure Notifications

**Washington Exposure Notifications (வொஷிங்டன் எக்ஸ்போஷர் நொட்டிஃபிகேஷன்ஸ்) என்றால் என்ன?**
Washington Exposure Notifications என்பது பயனர்கள் கொவிட்-19 நோய்த்தொற்றுப் பாதிப்புக்கு ஆளாகுவார்களாயின், தனிப்பட்ட தகவல்கள் எதனையும் பகிர்ந்து கொள்ளாது, அது பற்றி அவர்களுக்கு எச்சரிக்கின்ற, ஸ்மார்ட்பேசிகளின் ஊடாக வேலை செய்யும் ஒரு புதிய கருவியாகும் அது முற்றிலும் தனிப்பட்டதாகும், நீங்கள் யார் என்பதை அல்லது நீங்கள் எங்கே செல்கிறீர்கள் என்பதை அறியவோ அல்லது உங்களைப் பின்தொடரவோ மாட்டாது.

**அது எவ்வாறு இயங்குகிறது?**
நீங்கள் WA Notify (டபிள்யுஏ நொட்டிஃபை) ஐ செயல்படுத்தும் போது, தங்களுடைய தொலைபேசிகளில் WA Notify ஐ செயல்படுத்தியுள்ள மனிதர்களின் தொலைபேசிகளுடன் உங்களுடைய தொலைபேசி எழுமாறான, அநாமதேயமான குறியீடுகளைப் பரிமாற்றிக் கொள்ளும். இந்தச் செயலி, உங்கைளைப் பற்றிய எந்தவொரு தகவலையும் வெளிப்படுத்தாமல் இந்த எழுமாறான குறியீடுகளை பரிமாற்றிக் கொள்வதற்கு ப்ளூடூத் லோ எனர்ஜி (பீஎல்ஈ) (Bluetooth Low Energy (BLE)) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. கடந்த இரண்டு வாரங்களுக்குள் உங்களுக்கு அருகாமையில் இருந்த மற்றொரு WA Notify பயனருக்கு கொவிட்-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, அவருடைய உறுதிப்படுத்தல் குறியீடு செயலியில் சேர்க்கப்படுமாயின், உங்களுக்கு நோய்த்தொற்று வாய்ப்பு இருப்பதாக ஓர் அநாமதேயமான அறிவித்தல் கிடைக்கும். இது உங்களுக்குத் தேவையான பராமரிப்பை விரைவாகப் பெறுவதற்கும், உங்களின் மூலம் கொவிட்-19 உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கும் உதவும்.

**அது உங்களுக்கு எப்படி உதவும்?**
நோய்த் தொற்றுப் பாதிப்பு அறிவிப்பை அதிகமான மனிதர்கள் பயன்படுத்தும் போது பயன்கள் பாரியதாக இருக்கும் என்று ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறிய எண்ணிக்கை மனிதர்கள் WA Notify ஐப் பயன்படுத்துவது கூட தொற்றுக்களினதும் மரணங்களினதும் எண்ணிக்கையைக் குறைக்கும் என்று வொஷிங்டன் மாநிலத்திலுள்ள மூன்று பிராந்தியங்களை அடிப்படையாகக் கொண்ட மாதிரிகள் காட்டுகின்றன. முகமூடிகள் அணிவது, சரீர இடைவெளி, ஒன்றுகூடல்களை சிறியதாக அமைத்துக் கொள்ளல் என்பவற்றைப் போன்று WA Notify செயலியும் கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கு உதவும் மற்றுமொரு கருவியாகும்.

**உங்கள் தனியுரிமை பாதுகாக்கப்படுவது எவ்வாறு?**
WA Notify செயலியானது, உங்கள் தனியுரிமையைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்பட்டுள்ள Google Apple Exposure Notification தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த முறைமையானது ஒருபோதும் Google, Apple, வொஷிங்டன் மாநில சுகாதாரத் துறை (டிஓஎச்) (Department of Health (DOH)) அல்லது ஏனைய பயனர்களிடமுள்ள எந்தவொரு அமைவிடத் தரவையும் அல்லது தனிப்பட்ட தகவல்களையும் சேகரிக்கவோ அல்லது பகிரவோ மாட்டாது. இதில் பங்கேற்பது முற்றிலும் தன்னார்வமானதாகும். பயனர்கள் எந்த நேரத்திலும் இணைவதை அல்லது வெளியேறுவதைத் தெரிவு செய்ய முடியும்.

**எனது தொலைபேசிக்கு WA Notify செயலியைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு?**

| | |
|---|---|
| **iPhone இல்** அமைவுகளில் நோய்ப் பாதிப்பு அறிவுப்புகளைச் செயல்படுத்தவும்:<br>- அமைவுகளுக்குச் செல்லவும்<br>- நோய்ப் பாதிப்பு அறிவிப்புகள் வரை உருட்டவும்<br>- "நோய்ப் பாதிப்பு அறிவிப்புகளை ஆன் செய்யவும்" என்பதன் மீது க்ளிக் செய்யவும்<br>- ஐக்கிய அமெரிக்கா என்பதைத் தெரிவு செய்யவும்<br>- வொஷிங்டன் என்பதை தெரிவு செய்யும் | **Android தொலைபேசியில்:**<br>- Google Play Store இற்குச் செல்லவும்<br>- Washington Exposure Notifications செயலியைப் பதிவிறக்கவும் |

**வொஷிங்டன் மாநிலம் இந்தத் தீர்வை ஏன் தெரிவு செய்தது?**
வொஷிங்டன் மாநிலம் Apple/Google தீர்வை மீளாய்வு செய்வதற்காக பாதுகாப்பு மற்றும் சிவில் சுதந்திர நிபுணர்கள் மற்றும் பல்வேறு சமுதாயங்களின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட மாநில மேற்பார்வைக் குழுவொன்றை அமைத்தது. அந்தக் குழு, தளத்தின் நிரூபிக்கப்பட்ட நம்பகத்தன்மை, வலுவான தரவு பாதுகாப்பு மற்றும் பிற மாநிலங்களின் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இத்தெரிவைப் பரிந்துரைத்தது.